## பெருமையுடன் இருந்திருக்கிறாயா ?

உன் வாழ்வின் எந்தப் பகுதியில் எல்லாம் பெருமையுடன் இருந்திருக்கிறாயோ அதைத் தேவன் தாமே உனக்குத் திட்டவட்டமாகக் காட்ட அவரை அனுமதி.

- தேவனுடைய சித்தத்தை விட என்னுடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் அதிக ஆர்வம்.
- தேவனுடைய பலத்தையும் ஆதாரத்தையும் சார்ந்திருப்பதை விட்டு விட்டு என் மேலேயே சார்ந்திருத்தல்.
- சில வேளைகளில், எனது எண்ணங்களும் கருத்துகளும் பிறருடைய கருத்துக்களைவிடச் சிறந்தவை என்று கருதுதல்.
- என்னில் இச்சையடக்கத்தை வளர்த்துக் கொள்வதற்குப் பதிலாக பிறரை அடக்குவதில் தீவிரம் காட்டுதல்
- சில வேளைகளில் என்னைப் பிறரை விட முக்கியம் வாய்ந்தவனாக எண்ணிக் கொள்ளுதல்
- எனக்கு எதுவுமே தேவையில்லை, எல்லாமே இருக்கிறது என்ற எண்ணம்
- எனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய மதிப்பு, பெயர், பாராட்டு எல்லாம் கிடைத்தாக வேண்டும் என்பதில் அளவுக்கு மீறிய கவனம் செலுத்துதல்
- பட்டங்கள், பதவிகள் இவை கொண்டு வரும் பெயரையும் புகழையும் நாடியலைதல்
- பிறரை விட எனக்கு மனத்தாழ்மை அதிகம் என்று அடிக்கடி எண்ணிக் கொள்ளுதல்
- என்னைப் பற்றி எண்ண வேண்டியதற்கு மேலாக எண்ணும்படி வேறெந்த வழியிலாவது தூண்டப்படுதல்

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

**நீல் T. ஆன்டர்சன் எழுதிய “அடிமைத்தனத்தை முறிப்பவர்” ,”இருளின் மீது வெற்றி” புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது**